

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 03.09.2024 அன்று சென்னை எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்ற மாநில அளவிலான பள்ளி ஹாக்கி லீக் போட்டி நிறைவு விழாவில், கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற இராமநாதபுரம் மாவட்டம், சையத் அம்மாள் மேல்நிலை பள்ளி அணியினருக்கு பரிசு கோப்பையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் ஹாக்கி இந்தியா அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று 03.09.2024 அன்று பார்முலா 4 கார் பந்தயத்திற்கு அமைக்கப்பட்ட கட்டமைப்புகளை அகற்றும் பணிகளை பார்வையிட்டு விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் ஆர். செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, கூடுதல் காவல் ஆணையர் (போக்குவரத்து) ஆர். சுதாகர் மேலாண்மை இயக்குநர் அகிலேஷ் ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு

# மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்போம்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்: அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, செப். 5 -
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் காணொளி காட்சி வாயிலாக மாவட்ட அவை தலைவர் அ. சுப்பிரமணியன் தலைமையில் 3.9.2024 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர் கலந்துகொண்டனர்.



கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்க வேண்டும் என்று ஒரு மனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

மேலும் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி, கபிலர்மலை

# மோகனூர் ஒன்றியங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### எஸ்.எம்.மதுரா செந்தில் - ரேகா பிரியதர்ஷினி பங்கேற்பு!

நாமக்கல், செப். 5 -
நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரமத்தி வேலூர், கபிலர்மலை மோகனூர் மேற்கு ஆகிய ஒன்றியங்களிலும், பரமத்தி, வேலூர், வெங்கரை, பாண்டமங்கலம், பொத்தனூர் ஆகிய பேரூர்களிலும் ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பரமத்தி ஒன்றியம் நடந்தை மகளிர் சுய உதவிக் குழு கூடத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.பி.தனராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளர் அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ரங்கசாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பிரேமா வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சேலம் முன்னாள் மேயரும், ஆதி திராவிடர் நல வாரிய உறுப்பினருமான ரேகா பிரியதர்ஷினி கலந்து கொண்டார். கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் சார்பு அணி நிர்வாகிகள் ஆர் பாலாஜி, பூக்கடை டி சுந்தர் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கபிலர்மலை ஒன்றிய கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கபிலர்மலை கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கபிலர்மலை ஒன்றிய செயலாளர் சண்முகம் தலைமை வகித்தார். சேலம் முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் உறுப்பினர்களிடையே வரும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு களப்பணி ஆட்டம் வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார். மேலும் கட்சி நிர்வாகிகளிடம் அப்பகுதியில் உள்ள குறைகளை கேட்டு அறிந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

மேலும் நிர்வாகிகளிடம் வரும் உள்ளாட்சி மற்றும் சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக இடங்களில் வெற்றி பெறுவது, அதற்காக நிர்வாகிகள் எவ்வாறு செயல்படுவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து பரமத்தி வேலூர் வெங்கரை, பாண்டமங்கலம் போத்தனூர் ஆகிய பேரூர்களிலும் பொது உறுப்பினர்கள் கூட்டம் பேரூர் கழக செயலாளர்கள் முருகன், ராமலிங்கம் ரமேஷ்பாபு, சூர்யா ராமலிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

## திருக்கோவிலூர் தெற்கு,வடக்கு,மேற்கு

# ஒன்றியங்களில் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருக்கோவிலூர், செப். 5 -
கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி திருக்கோவிலூர் தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று ஒன்றியங்களில் சார்பில் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் ஜி. அரியூர், சந்தைப்பேட்டை மற்றும் புறவழி சாலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் ஒன்றிய கழக அவைத்தலை வர்கள் கண்ணன், தமிழரசன், ந. பொன்னுரங்கம் ஆகியோர்கள் தலைமை தாங்கினார், ஒன்றிய கழக துணைச் செயலாளர்கள் தணிகாசலம், முருகன் செல்வமணி சுப்பிரமணி, கணேஷ் சந்திரசேகர், சிங்காரவேல், ரவிச்சந்திரன், ராமதாஸ், ஜோதி ஏழுமலை, ஒன்றிய கழக பொருளாளர்கள் காமராஜ், இளங்கோவன், ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர், ஒன்றிய கழக செயலாளர்கள் ராஜேந்திரன் அய்யனார் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்த அனைத்து கழக நிர்வாகிகளையும் வரவேற்றனர்.

இதில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார், அப்போது அவர் பேசியதாவது கடந்த 3 ஆண்டுகளில் தமிழக முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்த திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க திண்ணை பிரச்சாரம் செய்திட வேண்டும், சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும், கிராமங்கள்தோறும் மகளிர் உறுப்பினர்கள் சேர்க்கை அதிகப்படுத்த வேண்டும், வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாக மீண்டும் நமது கழக தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களை முதலமைச்சராக அரியணையில் அமர வைக்கவும் அவரது எண்ணம் ஈடேறுகின்ற வகையில் 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் அதிலும் நமது கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் நமது தலைமை கழக அறிவிக்கும் வேட்பாளர்களை வெற்றி பெற செய்யவும் அது மட்டும் இல்லாமல் ரிஷிவந்தியம் தொகுதியில் கடந்த முறை வென்ற வாக்கு வித்தியாசத்தை விட வருகிற சட்டமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக பாடுபட வேண்டும் என்று பேசினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் ராஜவேல், தியாகதுருகம் தாமோதரன், தனம் சக்திவேல், ஜெய்சங்கர், உதயா, சோழ பாண்டியபுரம் சிவா, முத்துவேல், முருகவேல், வினோத் ஏகாம்பரம், பிரகாஷ், ஆறுமுகம், ஜெயபால், மாணிக்கம், ஏழுமலை , குருமூர்த்தி விநாயகம், சண்முகம், அபிஷேக் ஜெயப்பிரகாஷ், ஐயப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர், விஷ்ணு, சுந்தரம், வழக்கறிஞர் சிவக்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.




நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தச்சநல்லூர் ஜி.வி.மகாலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. உடன் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், பெருமாள், சுப்ரமணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லதுரை, ஏ.எல்.எஸ்.லட்சுமணன், ராஜ், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன்,துபாய் சாகுல், சுதா மூர்த்தி உள்பட பலர் உள்ளனர் .

## வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் - கோவை - ஈரோடு -

# திருப்பூர் மாவட்டங்களுக்கான - மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலை!

கோவை, செப். 5-
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (03.09.2024) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர்/ அரசு முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர்/ முதன்மை செயலாளர் கோ.பிரகாஷ் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, வேளாண்மைத் துறை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர். கணபதி. ப. ராஜ்குமார் (கோயம்புத்தூர்), கா.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), பிரகாஸ் (ஈரோடு), தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர்.வி.கீதாலெட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா, வேளாண்மை பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன், இணை இயக்குநர் வேளாண்மைத் துறை வெங்கடாச்சலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. மல்லிகா மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, ஒவ்வொரு திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை விட அதிகமாக எய்திட துறை அலுவலர்களுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தினார்.

வேளாண்மை துறை சார்பில் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.3.14 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி பம்பு செட், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.23 இலட்சம் மதிப்பில் பவர் டில்லர்களையும், என மொத்தம் 12 பயனாளிகளுக்கு ரூ.26.14 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்.

பின்னர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்றுவரும் பணிகள் தொடர்பாக கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண்மைத் துறை மண்டலஅளவிலான அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கடந்த 7-8 மாதங்களுக்கு முன்பு தென்னை மரங்கள் தென்னை வாடல் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், நேரடியாக திருப்பூர், பொள்ளாச்சி விவசாயிகளுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டு, எந்த இடங்களில் பாதிப்பு இருக்கிறது என்பது தொடர்பாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் ஒவ்வொரு தென்னை தோப்புவாரியாக நேரடியாகச் சென்று களஆய்வு செய்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தென்னை வாடல் நோயால் அதிகமாக பாதிக்கப்பட்ட மரங்களை நீக்குவதற்கும், அருகில் உள்ள தென்னை மரங்களுக்கு இந்நோய் பரவாமல் தடுக்கவும் ரூ.72கோடி மதிப்பீட்டில் நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது. தென்னை வாடல் நோய் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைந்துள்ளதா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு நெல் ஊக்கத்தொகையாக இது வரை ரூ953 கோடியும், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர் காரணத்தால் பாதிக்கப்பட்ட 13 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.942. கோடி நிவாரணத் தொகையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 46 இலட்சம் இலவச தென்னங்கன்றுகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து, அவர்களிடம் கேட்டறிந்து விரைவாக தீர்வு காணப்பட்டு வருகின்றது. என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்றுவரும் பணிகள் தொடர்பாக கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண்மைத் துறை மண்டல அளவிலான அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த மாவட்டங்களில் வேளாண்மையை எவ்வாறு மேம்படுத்தவேண்டும், விவசாயிகள் எந்த பயிர்களை விளைவிப்பதில் அதிகமாக ஈடுபடுகிறார்கள், விவசாயிகளை எவ்வாறு ஊக்கப்படுத்துவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. விவசாயிகள் உணவுக்கான பயிர்களை உற்பத்தி செய்கின்றபோது அவை உடல்நலத்தை பாதுகாக்கின்ற வகையில் உற்பத்தி செய்யவேண்டும். இலக்கை விட அதிகமான உணவு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூட்டம் மூன்று மாவட்ட விவசாயிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் பணகுடி ஷாண்தாமஸ் மகாலில் மாவட்ட அவைத்தலைவர், வள்ளியூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், நம்பி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், பிரபாகர பாண்டியன், சித்திக்,மாநில அணி துணைச் செயலாளர்கள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், எரிக்ஜூடு, பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், அபுபக்கர், சாந்தி சுபாஷ், ஒன்றியச் செயலாளர்கள் ஜோசப்பெல்சி,ஜெகதீஸ், ராஜன், சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின், தங்கப்பாண்டியன், போர்வெல் கணேசன், முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துகிருஷ்ணன், நகரச் செயலாளர்கள் கணேசன் மணிசூரியன், பேரூர் செயலாளர்கள் சேதுராமலிங்கம், ஜான் கென்னடி, வானுமாமலை, அயூப்கான், கசமுத்து, முருகன், மனிஷா செல்வராஜ், இசக்கி பாண்டி,சுப்பையா,மணிகண்டன் தி.வானுமாமலை,அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், மல்லிகா அருள், அன்றனி அஸ்வின்பிரேமா, அலெக்ஸ் அப்பாவு, மாடசாமி,ராஜசங்கரலிங்கம்,நெல்லை மணி, ஏ.ஆர்.ரகுமான், திருப்பதி ஜெயசீலன், முருகன், பீர்முகமது, அன்வர் உசேன், தவசிமணிகண்டன், சகாயபிரபு, நா.முருகன், ஒன்றிய பெருந்தலைவர் பூங்கோதை சீவல முத்துக்குமார், பேரூராட்சி தலைவர்கள் தனலட்சுமி தமிழ்வாணன், ஆபிதா ஜமால்தீன், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.